உ
சிவமயம்




# அமரர் இராசரத்தினம் பவானந்தன்

## அவர்களின் சிவபதப்பேறு குறித்த

# நினைவு மலர்

## 12.11.2001

இணுவிலைப் பிறப்பிடமாகக் கொண்ட

அமரர் இராசரத்தினம் பவானந்தன்

அவர்களின்

சிவபதப்பேறு

குறித்த

# நினைவு மலர்

12.11.2001

உ

சிவமயம்

தோற்றம்
09 ★ 10 ★ 1959



மறைவு
15 ★ 10 ★ 2001

# அமரர் இராசரத்தினம் பவானந்தன்

## திதி வெண்பா

ஆண்டு விஷு வருடமாம் ஆன புரட்டாதி மாதம் - ஈண்டிருந்து
பூண்ட சதுர்த்தசி திதியாம்
இராசரத்தினம் பவானந்தன் கண்ணுதலான் பொற்பாதம்
பந்தமெனச் சென்றார் பணிந்து

## அமரர் திரு.இராசரத்தினம் பவானந்தன்
# வாழ்க்கை வரலாறு

ஈழத்தின் வட புலமான யாழ்ப்பாணத்தில் இணுவையூரின் மேற்குப் பகுதியில் காலம் சென்ற கந்தையா இராசரத்தினத்திற்கும் காலம் சென்ற சிவசம்பு பரமேஸ்வரிக்கும் ஐந்தாவது பிள்ளையாக 09.10.1959ம் ஆண்டு பிறந்தார். திரு.இ.நித்தியானந்தன் (ஆசிரியர் வவுனியா), திருமதி புஸ்பகுமாரி அருள்நாதன், காலஞ்சென்ற திரு.இ.கமலானந்தன், திருமதி. தேவநேரு வசந்த குமாரி, திருமதி.கருணாநிதி தாரணி(கனடா), திரு.இ.மணிவண்ணன் (ஜேர்மனி), திருமதி இரவிதாஸ்வான்மதி (லண்டன்), அமரர் இராசரத்தினம் பவானந்தம் அவர்களிற்குச் சகோதரங் களாகத் திகழ்ந்தார்கள்.

அமரர் இராசரத்தினம் பவானந்தன் அவர்கள் 1979ம் ஆண்டு இலங்கை மின்சாரசபையில் பதவியேற்று சிறப்பாக வேலைசெய்யும் காலத்தில் 1982 ஆம் ஆண்டு சிங்கப்பூரில் ஓர் நிறுவனத்தின் அழைப்பின் பேரில் சிங்கப்பூரில் திறம்படக் கடமையாற்றினார். அந் நிறுவனத்தின் நன் மதிப்பைப் பெற்று அவர்களின் புலமைப்பரிசில் பெற்று பிரான்சில் கடமையாற்றும் வேளையில் அந் நிறுவனத்தில் படிப்படியாக உயர்வு பெற்று ஜேர்மனியில் அந் நிறுவனத்தின் தலைமைப் பதவியை ஏற்றார்.

ஜேர்மனியில் பதவியேற்றுவரும் காலத்தில் அவருடைய இளைய சகோதரரையும் அழைத்து அந் நிறுவனத்தில் கடமையாற்றுவதற்கு உறுதுணை புரிந்து அந் நிறுவனத்தில் பணியாற்றுவதற்கு உதவிகள் செய்தார் பின்னர் இருவரும் அந் நிறுவனத்தில் கடமையாற்றும் வேளையில் 1987ஆம் ஆண்டு இலங்கைக்குச் சென்று திரும்பவும் ஜேர்மனிக்குச் செல்லவேண்டும் என்ற ஆசையில்

இலங்கைக்கு வருகைதந்தார். பின்னர் தன்னுடைய உற்றார் உறவினர்களோடு இருக்க வேண்டும் என நினைத்து இறைவழிபாட்டில் தன்னுடைய காலத்தை போக்க வேண்டும் என்று இல்லறத்தில் கூட நாட்டமில்லாமல் தனிமனிதனாக வாழ வேண்டும் என ஆசைப்பட்டார் அதற்கமைய அவர் தனி மனிதனாக தான் இறக்கும் வரை வாழ்ந்து காட்டியுள்ளார்

இவர் தனிமையாக வாழ்ந்தாலும் பிறர்க்கு உதவ வேண்டும் என்ற மனப்பாங்குடையவர். இவர் தனது சகோதரங்களையும் பேணிப்பாதுகாத்து , அத்துடன் நில்லாமல் தனது மைத்துனர்களாகிய அருள்நாதன் (இலங்கை மின்சாரசபை,யாழ்ப்பாணம்), காலஞ்சென்ற தேவநேரு(கிராம சேவைஉத்தியோகத்தர்), திரு.கருணாநிதி (கனடா), திரு.N.இரவிராஜ்(லண்டன்) அவர்களிற்கும் பேருதவிகள் புரிந்து திருப்தி கண்டார். அது மட்டுமல்லாமல் ஏழை எளியவர்களுக்கு உதவுவதில்பரமதிருப்தியடைந்தார்.

இவருக்கு மைத்துனிகளாக திருமதி. தனலட்சமி நித்தியானந்தம், திருமதி பிர்கிற்(Birgit) மணிவண்ணன் திகழ்கிறார்கள்.

இவருக்கு பெறாமக்களாக செல்வி நி.சோபனா (வேப்பங்குளம் இந்து மகாவித்தியாலயம்) செல்வன் நி.நிர்சாந்த் (வேப்பங்குளம் இந்து மகா வித்தியாலயம்) செல்வன் ம.பஸ்கல் மாறன் (ஜேர்மனி), செல்வி தேவிடமாறா(ஜேர்மனி), செல்வி.ம.தேவிநெபேறா (ஜேர்மனி), செல்வன் ம.மாசல்(ஜேர்மனி) இன்பத்துடன் திகழ்கிறார்கள். அத்துடன் இவருக்கு மருமக்களாக செல்வி அ.சுகன்யா (யா/தொழில்நுட்பக்கல்லூரி), செல்வன்.அ.சுஜந்தன் (கொழும்பு), செல்வன் அ.சுபாஸ்ராவ் (யா/தொழில் நுட்பக் கல்லூரி), செல்வி.அ.சுபனா(உடுவில் மகளிர் கல்லூரி), செல்வன்.அ.சுபராஜ் (யாழ்/சென்ஜோன்ஸ் கல்லூரி), செல்வன்.தே.மகீபன்(யாழ் இந்துக் கல்லூரி),செல்வி தே.மகதி(உடுவில் மகளிர்கல்லூரி),செல்வி.த.தருணி (இணுவில் மத்திய கல்லூரி), செல்வன் தே.பரணன் (இணுவில் மத்திய கல்லூரி), செல்வன் க.தயன் (கனடா), செல்வி.க.கவி(கனடா), செல்வி.க.கபிஷா (கனடா), ஆர்.வருணிகா(லண்டன்) இனிதுடன் திகழ்கிறார்கள்.



அன்னாரது திடீர் மறைவு எல்லோரையும் துன்ப வெள்ளத்துள் ஆழ்த்தினாலும் உறங்குவது போலும் சாக்காடு என்ற முது மொழிக்கிணங்க,

அன்னாரது திடீர் மறைவு எல்லோரையும் துன்ப வெள்ளத்துள் ஆழ்த்தினாலும் “உறங்குவது போலும் சாக்காடு” என்ற முது மொழிக்கிணங்க தனது அன்றாடக் கடமைகளை நிறைவேற்றிக் கொண்ட பின் துயிலச் சென்றது போல் எவ்வித கஷ்டமும் இன்றி இறைபதமெய்திய அமரர் கந்தையா இராசரத்தினம் அவர்களின் புனித வாழ்வை எண்ணி வியப்படையும் அவரது ஏழு பிள்ளைகளும் மருமக்களும் அன்னாரது புண்ணிய ஆத்மா சாந்தி பெற பிரார்த்திப்போமாக.

**‘வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்**
**தெய்வத்துள் வைக்கப்படும்’**

**‘நிலவரை நீள்புகழ் ஆற்றின் புலவரைப்**
**போற்றாது புத்தேன் உலகு’**

திருக்குறள்

உ
சிவமயம்

# விநாயகர் துதி



திருச்சிற்றம்பலம்

ஓதவினையகலும் ஓங்கு புகழ் பெருகும்
காதற் பொருள் அனைத்தும் கைகூடும்- சீதப்
பணிக்கோட்டு மால்வரை மேல் பாரதப் போர் தீட்டும்
தனிக் கோட்டு வாரணத்தின் தாள்.

## வைரவக் கடவுள் தேவாரம்

விரித்தபல் கதிர்கொள் சூலம் வெடிபடு தரும் கங்கை
தரித்ததோர் கோலகால பயிரவனாகி வேழம்
உரித்துமை அஞ்சக்கண் ஒண் திருமணிவாய் விள்ளச்
சிரித்தருள் செய்தார் சேறைச் செந்நெறிச் செல்வனாரே.

நீலுறு தோய் மெய்யும் நெசினிகள் அரற்றம் தாளும்
ஆலாமது உயிர்ப்பும் செங்கேள் அரவுவெற்றுடையுமாக
மாலைகள் அனந்த கோடி வயின் வயின் அசையும் மார்பும்
பரசும், நானும் சூலமும் துடியும் ஒன்றிய பொற் றோளும்
முக் கண்ணும் திங்களே போல் முனைத்தவா
எயினும் வள்ளி செக்கர் நம் சடையும்
செயிகள் றெனு எளு நகையுமாக – உரக்கி
வழவு கொண் ஆங்குதித்தனன் வகுகள்.



## தேவாரம்

மங்கையர்க்கரசி வளர்வைகோண் பாவை
வரி களைக் கைம்மடமானி
பங்கயற் செல்வி பாண்டிமா தேவி
பணி செய்து நாள்தொறும் பரவப்
பொங்கழ லுரவன் பூதநா யகனால்
வேதமும் பொருள்களு மருளி
அங்கயர் கண்ணி தன்னொடு மமர்ந்த
ஆலவா யாவது மிதுவே.

## திருவாசகம்

பால் நினைந்தூட்டும் தாயினுஞ் சாலப்
பரிந்து நீ பாவியே னுடைய
ஊனினை உருக்கி உள்ளொளி பெருக்கி
உலப்பிலா ஆனந்த மாய
தேனினைச் சொரிந்து புறம்புறந் திரிந்த
செல்வமே சிவபெருமானே
யானுனைத் தொடர்ந்து சிக்கெனப் பிடித்தேன்
எங் கெழுந் தருளுவதினியே.

## திருவிசைப்பா

ஒளிவளர் விளக்கே உலப்பிலா ஒன்றே
உணர்வு சூழ் கடந்ததோர் உணர்வே
தெளிவளர் பளிங்கின் திரள் மணிக் குன்றே
சித்தத்துள் தித்திக்குந் தேனே
அளிவளர் உள்ளத் தானந்தக் கனியே
அம்பலம் ஆடரங்காக
வெளிவளர் தெய்வக் கூத்து கந்தாயை
தொண்டனேன் விளம்புமா விளம்பே

**திருப்பல்லாண்டு**

மன்னுக தில்லை! வளர்க்க நம்
பக்தர்கள்! வஞ்சகர் போய் அகல
பொன்னின் செய் மண்டலத்துள்ளே புகுந்து
புவனி யெல்லாம் விளங்க
அன்ன நடை மடவாள் உமை கோன்
அடியோ முக்கருள் புரிந்து
பின்னைப் பிறவி யறுக்க நெறிதந்த
பித்தற்குப் பல்லாண்டு கூறுதுமே.

**திருப்புராணம்**

ஆதியாய் நடுவுமாகி யாவிலா வளவுமாகிச்
சோதியா யுணர்வு மாகித் தோன்றிய பொருளுமாகிப்
பேதியா வேகமாகிப் பொண்ணுமா யாணு மாகிப்
போதியா நிற்குந் தில்லை பொது நடம் போற்றி போற்றி.


**திருப்புகழ்**

பத்தியால் யானுனைப் பலகாலும்
பற்றியே மாதிருப் புகழ் பாடி
முத்தனா மாறெனைப் பெருவாழ்வின்
முத்தியே சேர்வதற் கருள்வாயே
உத்தமா தானசற் குணந்நேய
ஒப்பிலா மாமணிக் கிரிவாசா
வித்தகா ஞானசற் திறி பாதா
வெற்றி வேலாயுதப் பெருமாளே



உ
முருகன் துணை

# ஸ்ரீ கந்த சஷ்டி கவசம்



**காப்பு**

**அமரர் இடர்தீர அமரம் புரிந்த**
**குமரன் அடி நெஞ்சே குறி**

**துதிப்போர்க்கு வல்வினை போம், துன்பம் போம் நெஞ்சிற்**
**பதிப்போர்க்குச் செல்வம் பலித்துக் -கதித்(து) ஓங்கும்**
**நிஷ்டையும் கைகூடும், நிமலர் அருள் கந்தர்**
**சஷ்டிக் கவசந் தனை.**

சஷ்டியை நோக்கச் சரஹண பவனார்
சிஷ்டருக் குதவும் செங்கதிர் வேலோன்
பாத மிரண்டில் பன்மணிச் சதங்கை
கீதம் பாடக் கிண்கிணி யாட
மையல் நடஞ்செய்யும் மயில்வா கனனார்
கையில்வே லாலெனைக் காக்கவென் றுவந்து
வரவர வேலா யுதனார் வருக!
வருக! வருக! மயிலோன் வருக!
இந்திரன் முதலா எண்திசை போற்ற
மந்திர வடிவேல் வருக! வருக!
வாசவன் மருகா வருக வருக!
நேசக் குறமகள் நினைவோன் வருக!
ஆறுமுகம் படைத்த ஐயா வருக!
நீறிடும் வேலவன் நித்தம் வருக!

சிரகிரி வேலவன் சீக்கிரம் வருக!
சரவண பவனார் சடுதியில் வருக!
ரவண பவச ரரரர ரரர
ரிவண பவச ரிரிரிரி ரிரிரி
விணபவ சரவண வீரா நமோ நம
நிபவ சரவண நிறநிற நிறென
வசர வணப வருக!வருக!
அசுரர் குடிகெடுத்த ஐயா வருக!
என்னை யாளுமிளையோன் கையில்
பன்னிரண்டாயுதம் பாசாங்குசமும்
பரந்த விழிகள் பன்னிரண் டிலங்க
விரைந்தெனைக் காக்க வேலோன் வருக!
ஐயும் கிலியும் அடைவுடன் சௌவும்
உய்யொளி சௌவும் உயிரையும் கிலியும்
கிலியுஞ் சௌவும் கிளரொளிஐயும்
நிலைபெற் றென்முன் நித்தமும் மொளிரும்
சண்முகன் நீயும் தனியொளி யொவ்வும்
குண்டலி யாஞ்சிவ குகன்றினம் வருக!
ஆறு முகமும் அணிமுடி யாறும்
நீறிடு நெற்றியும் நீண்ட புருவமும்
பன்னிரு கண்ணும் பவளச் செவ்வாயும்
நன்னெறி நெற்றியில் நவமணிச் சுட்டியும்
ஈராறு செவியில் இலகு குண்டலமும்
ஆறிரு திண்புயத் தழகிய மார்பில்
பல்பூ ஷணமும் பதக்கமுந் தரித்து
நன்மணி பூண்ட நவரத்தின மாலையும்
முப்புரி நூலும் முத்தணி மார்பும்
செப்பழ குடைய திருவயி றுந்தியும்
துவண்ட மருங்கில் சுடரொளிப் பட்டும்
நவரத்தினம் பதித்த நற்சீராவும்
இருதொடை யழகும் இணைமுழந் தாளும்
திருவடியதனில் சிலம்பொலி முழங்க
செககண செககண செககண செகண
மொகமொக மொகமொக மொகமொக மொகென
நகநக நகநக நகநக நகென
டிகுகுண டிகுடிகு டிகுகுண டிகுண



ரரரர ரரரர ரரரர ரரர
ரிரிரிரி ரிரிரிரி ரிரிரிரி ரிரிரி
டுடுடு டுடுடு டுடுடு டுடு
டகுடகு டிகுடிகு டங்கு டிங்குகு
விந்து விந்து மயிலோன் விந்து
முந்து முந்து முருகவேள் முந்து
என்றனை யாளும் ஏரகச் செல்வ
மைந்தன் வேண்டும் வரமகிழ்ந் துதவும்
லாலா லாலா லாலா வேசமும்
லீலா லீலா லீலா விநோதனென்று
உன்திருவடியை உறுதியென் றெண்ணும்
என்தலை வைத்துன் இணையடி காக்க
என்னுயிர்க் குயிராம் இறைவன் காக்க
பன்னிரு விழியால் பாலனைக் காக்க
அடியேன் வதனம் அழகுவேல் காக்க
பொடிபுனை நெற்றியைப் புனிதவேல் காக்க
கதிர்வே லிரண்டும் கண்ணினைக் காக்க
விழிசெவி யிரண்டும் வேலவர் காக்க
நாசிக ளிரண்டும் நல்வேல் காக்க
பேசிய வாய்தனைப் பெருவேல் காக்க
முப்பத்திருபல் முனைவேல் காக்க
செப்பிய நாவைச் செவ்வேல் காக்க
கன்னமிரண்டும் கதிர்வேல் காக்க
என்னிளங் கழுத்தை இனியவேல் காக்க
மார்பை இரத்தின வடிவேல் காக்க
சேரிள முலைமார் திருவேல் காக்க
வடிவே லிருதோள் வளம்பெறக் காக்க
பிடரிக ளிரண்டும் பெருவேல் காக்க
அழகுடன் முதுகை அருள்வேல் காக்க
பழுபதி னாறும் பருவேல் காக்க
வெற்றிவேல் வயிற்றை விளக்கவே காக்க
சிற்றிடை யழகுறச் செவ்வேல் காக்க
நாணாங் கயிற்றை நல்வேல் காக்க
ஆண்பெண் குறிகளை அயில்வேல் காக்க
பிட்டமிரண்டும் பெருவேல் காக்க
வட்டக் குதத்தை வடிவேல் காக்க

பனைத்தொடை யிரண்டும் பருவேல் காக்க
கணைக்கால் முழந்தாள் கதிர்வேல் காக்க
ஐவிர லடியினை அருள்வேல் காக்க
கைகளிரண்டும் கருணைவேல் காக்க
முன்கை யிரண்டும் முரண்வேல் காக்க
பின்கை யிரண்டும் பின்னவள் இருக்க
நாவிற் சரஸ்வதி நற்றுணை யாக
நாபிக் கமலம் நல்வேல் காக்க
முப்பா நாடியை முனைவேல் காக்க
எப்பொழுதும் எனை எதிர்வேல் காக்க
அடியேன் வசனம் அசைவுள நேரம்
கடுகவே வந்து கனகவேல் காக்க
வரும்பகல் தன்னில் வச்சிரவேல் காக்க
அரையிருள் தன்னில் அனையவேல் காக்க
ஏமத்திற் சாமத்தில் எதிர்வேல் காக்க
தாமதம் நீக்கிச் சதுர்வேல் காக்க
காக்க காக்க கனகவேல் காக்க
நோக்க நோக்க நொடியில் நோக்க
தாக்க தாக்க தடையறத் தாக்க
பார்க்க பார்க்க பாவம் பொடிபட
பில்லி சூனியம் பெரும்பகை யகல
வல்ல பூதம் வாலாஷ்டிகப் பேய்கள்
அல்லல் படுத்தும் அடங்கா முனியும்
பிள்ளைகள் தின்னும் புழக்கடை முனியும்
கொள்ளிவாய்ப் பேய்களும் குறளைப் பேய்களும்
பெண்களைத் தொடரும் பிரமராக் கதரும்
அடியனைக் கண்டால் அலறிக் கலங்கிட
இரிசி காட்டேரி இத்துன்ப சேனையும்
எல்லிலும் இருட்டிலும் எதிர்படும் அண்ணரும்
கனபூசை கொள்ளும் காளியோ டனைவரும்
விட்டாங் காரரும் மிகுபல பேய்களும்
தண்டியக்காரரும் சண்டாளர்களும்
என்பெயர் சொல்லவும் இடிவிழுந் தோடிட
ஆனை யடியினில் அரும்பா வைகளும்
பூனை மயிரும் பிள்ளைகளென்பும்
நகமும் மயிரும் நிள்முடி மண்டையும்



பாவைக ளுடனே பலகல சத்துடன்
மனையித் புதைத்த வஞ்சனை தனையும்
ஒட்டிய செருக்கும் ஒட்டிய பாவையும்
காசும் பணமும் காவுடன் சோறும்
ஓது மஞ்சனமும் ஒருவழிப் போக்கும்
அடியனைப் கண்டாற் அலைந்து குலைந்திட
மாற்றார் வஞ்சகர் வந்து வணங்கிட
காலதூ தாளெனைக் கண்டாற் கலங்கிட
அஞ்சி நடுங்கிட அரண்டு புரண்டிட
வாய்விட் டலறி மதிகெட் டோடப்
படியினில் முட்டப் பாசக் கயிற்றால்
கட்டுடல் அங்கம் கதறிடக் கட்டு
கட்டி யுருட்டு கால்கை முறியக்
கட்டு கட்டு கதறிடக் கட்டு
முட்டு முட்டு விழிகள் பிதுங்கிட
செக்கு செக்கு செதில் செதிலாக
சொக்கு சொக்கு சூர்ப்பகைச் சொக்கு
குத்து குத்து கூர்வடிவேலால்
பற்று பற்று பகலவன் தணலெரி
தணலெரி தணலெரி தணலது வாக
விடுவிடு வேலை வெருண்டது வோடப்
புலியும் நரியும் புன்னரி நாயும்
எலியும் கரடியும் இனித்தொடர்ந் தோடத்
தேளும் பாம்பும் செய்யான் பூரான்
கடிவிட விஷங்கள் கடித்துய ரங்கம்
ஏறிய விஷங்கள் எளிதுடன் இறங்க
ஒளிப்புஞ் சுளுக்கும் ஒருதலை நோயும்
வாதஞ் சத்தியம் வலிப்பும் பித்தம்
சூலைசயங் குன்மம் சொக்குச் சிரங்கு
குடைச்சல் சிலந்தி குடல்விப் பிரீதி
பக்கப் பிளவை படர்தொடை வாழை
கடுவன் படுவன் கைத்தாள் சிவந்தி
பற்குத் தரணை பருவரை யாப்பும்
எல்லாப் பிணியும் என்றனைக் கண்டால்
நில்லா தோடநீ யெனக் கருள்வாய்
ஈரேழ் உலகமும் எனக்குற வாக
ஆணும் பெண்ணும் அனைவரும் மெனக்கா
மண்ணா ளரசரும் மகிழ்ந்துற வாகவும்

உன்னைத் துதிக்க உன்திரு நாமம்
சரவண பவனே சையெளி பவனே
திரிபுர பவனே திகழொளி பவனே
பரிபுர பவனே பவமொழி பவனே
அரிதிரு மருகா அமரா பதியைக்
காத்துத் தேவர்கள் கடுஞ்சிறை விடுத்தாய்
கந்தா குகனே கதிர்வே லவனே
கார்த்திகை மைந்தா கடம்பா கடம்பனை
.இடும்பனை யழித்த இனியவேல் முருகா
தணிகா சலனே சங்கரன் புதல்வா
கதிர் காமத்துறை கதிர்வேல் முருகா
பழநிப்பதிவாழ் பால குமரா
ஆவினன் குடிவாழ் அழகிய வேலா
செந்தின்மா மலையுறும் செங்கல் வராயா
சமரா புரிவாழ் சண்முகத் தரசே
காரார் குழலாள் கலைமகள் நன்றாய்
என்னா விருக்க யானுனைப் பாடஎனைத்
தொடர்ந் திருக்கும் எந்தைமுருகனைப்
பாடினேன் ஆடினேன் பரவசமாக
ஆடினேன் ஆடினேன் ஆவினன் பூதியை
நேச முடன்யான் நெற்றியில் அணியப்
பாச வினைகள் பற்றது நீங்கி
உன்பதம் பெறவே உன்னரு ளாக
அன்புடன் இரீ அன்னமுஞ் சொன்னமும்
மெத்த மெத்தாக வேலா யுதனார்
சித்திபெற் றடியேன் சிறப்புடன் வாழ்க
வாழ்க வாழ்க மயிலோன் வாழ்க
வாழ்க வாழ்க வடிவேல் வாழ்க
வாழ்க வாழ்க மலைக்குரு வாழ்க
வாழ்க வாழ்க மலைக்குற மகளுடன்
வாழ்க வாழ்க வாரணத் துவஜம்
வாழ்க வாழ்கஎன் வறுமைகள் நீங்க
எத்தனை குறைகள் எத்தனை பிழைகள்
எத்தனை யடியென் எத்தனை செய்யினும்
பெற்றவன் நீகுரு பொறுப்ப துன்கடன்




பெற்றவள் குறமகள் பெற்றவ ளாமே
பிள்ளையென் றன்பாய் பிரிய மளித்து
மைந்தனென் மீதுன் மனமகிழ்ந் தருளித்
தஞ்சமென் றடியார் தழைத்திட அருள்செய்
கந்தர் கஷ்டி கவசம் விரும்பிய
பாலன் தேவ ராயன் பகர்ந்ததைக்
காலையில் மாலையில் கருத்துடன் நாளும்
ஆசாரத்துடன் அங்கந் துலக்கி
நேச முடனொரு நினைவது வாகிக்
கந்தர் சஷ்டி கவச மிதனைச்
சிந்தை கலங்காது தியானிப் பவர்கள்
ஒருநாள் முப்பத் தாறுருக் கொண்டு
ஓதியே ஜெபித்து உகந்துநீ றணிய
அஷ்டதிக் குள்ளோர் அடங்கலும் வசமாய்த்
திசைமன்ன ரெண்மர் செயல தருளுவர்
மாற்றல ரெல்லாம் வந்து வணங்குவர்
நவகோள் மகிழ்ந்து நன்மை யளித்திடும்
நவமதனெனவும் நல்லெழில் பெறுவர்
எந்த நாளும் மீரெட்டாய் வாழ்வார்
கந்தர்கை வேலாம் கவசத் தடியை
வழியாய்க்காண மெய்யாய் விளங்கும்
விழியாற்க்காண வெருண்டிடும் பேய்கள்
பொல்லா தவரைப் பொடிப் பொடி யாக்கும்
நல்லோர் நினைவில் நடனம் புரியும்
சர்வ சத்துரு சங்கா ரத்தடி
அறிந்தெனதுள்ளம் அஷ்டலட்சுமிகளில்
வீரலட்சுமிக்கு விருந்துண வாகச்
சூரபத் மாவைத் துணித்தகை அதனால்
.இருபத் தேழ்வர்க் உவந்தமு தளித்த
குருபரன் பழநிக் குன்றினி லிருக்கும்
சின்ன குழந்தை சேவடி போற்றி
எனைத்தடுத் தாட்கொள்ள என்றனதுள்ளம்
மேவிய வடிவுறும் வேலவ போற்றி
தேவர்கள் சேனாபதியே போற்றி

குறமகள் மனமகிழ் கோவே போற்றி
திறமிகு திவ்விய தேவா போற்றி
இடும்பா யுதனே இடும்பா போற்றி
கடம்பா போற்றி கந்தா போற்றி
வெட்சி புனையும் வேளே போற்றி
உயர்கிரி கனக சபைகோ ரரசே
மயில்நட மிடுவோய் மலரடி சரணம்
சரணம் சரணம் சரவண பவஓம்
சரணம் சரணம் சண்முகா சரணம்



**கந்தசஷ்டி கவசம் முற்றிற்று**

# நன்றி



எங்கள் குடும்பத் தலைவர்
திரு. இராசரத்தினம் பவானந்தன்
அவரகளின்
மறைவு கேட்டு உதவிய
அனைவருக்கும்,

இன்று நடைபெறும் சபிண்டீகரண
நிகழ்வுகள் சிறக்க பல்லாற்றலும்
உதவிய உள்ளங்கட்கும்,

எமது மனம்
நிறைந்த நன்றி.

குடும்பத்தினர்

இணுவில் மேற்கு,
இணுவில்.

HariKanan Printers, 424 A, K.K.S Road. Jaffna